ISSN : 2455 - 0531

இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com

editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018


IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018

REF.NO.: IIJIF180301

office@iijif.com

https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER

இல.இராஜதுரை

க.தேவி

மீ.கோமதி

க.ரேவதி

வீ.மீனாட்சி

ம.பெட்ரிக் ஜெபராஜ்

ப.புவனேஸ்வரி

இரா.நித்யலெட்சுமி

சே.முனியசாமி

அ.அனேஜா

வி.வசந்தா

அ.புவியரசு

தி.நிரஞ்சனி

மா.யோகராஜ்

யே.டிலானி

மொ.சபீதாபானு

கா.தினேஷ்

ஆ.ஷைலா ஹெலின்

ம.சந்துரு

வசந்தமணி

பி.விஜி

த.சத்தியராஜ்

மா.பரமசிவன்

ஆ.மணி

அ.மோகனா

இரா.இராஜா

கி.சங்கரநாராயணன்

ப.திருஞான சம்பந்தம்

மு.நாகராஜன்

விஸ்வேஸ்வரன்

மௌ.அஸ்கர் அலி

மா. உமாமகேஸ்வரி

சு.பேச்சியம்மாள்

கு.தனலெட்சுமி

அ.பிரீதா

மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி

கு.சரஸ்வதி

இரா.வைதேகி

சி.யுவராஜ்

ந.மாலதி

இரா.பிரசன்னா

ப.மணிகண்டன்

ரா.ராஜராஜன்

நா.மலர்விழி

சே.செந்தமிழ்ப்பாவை

பெ.குபேந்திரன்

பெ.ராஜா

மா.ஆசியாதாரா

வி.மல்லிகா

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13
May 2018 Volume IV Issue 13


# உள்ளே …

தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?
முனைவர் ஆ.மணி | 4
பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்
முனைவர் அ.மோகனா | 12
யாப்பியலும் கணக்கியலும்
முனைவர் இரா. இராஜா | 19
வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26
கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34
முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்
முனைவர் மு.நாகராஜன் | 40
திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை
விஸ்வேஸ்வரன் | 45
தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
திரவியராசா நிரஞ்சினி | 53
சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59
பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64
இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69
பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்
கு. தனலட்சுமி | 75
பழந்தமிழரின் போர் முறைகள்
அ.பிரீதா | 79
முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு
மு.தமிழ்முல்லை | 83
பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்
ரெ. அருணா தேவி | 87
சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்
முனைவர் கு.சரஸ்வதி | 92
எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)
இரா. வைதேகி | 96
…

UGC APPROVED JOURNAL NO: 64244




அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்
சி. யுவராஜ் | 99

அகநானூற்றின் கட்டமைப்பு
ந. மாலதி | 104

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்
இரா. பிரசன்னா | 107

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்
ப.மணிகண்டன் | 111

குறுந்தொகை உணர்த்தும் அறம்
முனைவர் ரா. ராஜராஜன் | 115

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்
முனைவர் நா. மலர்விழி | 119

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்
முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்
பெ.ராஜா | 126

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை
முனைவர் மா.ஆசியாதாரா | 130

## தொகுதி - இரண்டு

## காப்பிய இலக்கியம்

ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்
முனைவர் வி.மல்லிகா | 136

நளன்கதை கூறும் இலக்கியங்கள்
Rajadurai.L | 140

## பக்தி இலக்கியம்

ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை
க. தேவி | 144

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்
முனைவர் மீ. கோமதி | 148

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்
க.ரேவதி | 152

## தற்கால இலக்கியம்

'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்
முனைவர் வீ.மீனாட்சி | 155

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு
ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு
ப. புவனேஸ்வரி | 163

தினமணி இதழும் தலையங்கமும்
முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்
சே.முனியசாமி | 171

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்
அரியரெத்தினம் - அனேஜா | 182

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு
வினாயகமூர்த்தி - வசந்தா | 192

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்
முனைவர் அ.புவியரசு | 203

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்
யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

வள்ளலார் வகுத்த இனம்
கா. தினேஷ் | 230

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்
ஆ. ஷைலா ஹெலின் | 233

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்
யேசுஜயா டிலானி | 238

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்
Shandru Mariyadas | 254

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்
பி.விஜி | 269

## நூல் மதிப்பீடு

சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை
த.சத்தியராஜ் | 277

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்
முனைவர் மா.பரமசிவன் | 286

...

மதிப்பிடப்பெற்றது

# சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்

பெ.ராஜா
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017.

ஒரு நாட்டின் வரலாற்றினை நன்கறியத் துணைபுரிவனவற்றுள் சிறப்பு மிக்கவை அந்நாட்டு இலக்கியங்கள். சங்க இலக்கியங்களில் மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வள்ளல் பெருமக்கள் ஆகியோர் பற்றிய செய்திகளும் அந்நாளைய பழக்க வழக்கங்களும், பழம் பெரும் நகர்கள் பற்றிய குறிப்புகளும் இன்னபிற செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றுள் நெய்தல் பாடல்களுள் காணப்படுவனவும், ஏனைய திணைகளில் காணப்படும் நெய்தல் நிலச் சார்புடையனவுமான செய்திகளில், குறிப்பிடத்தக்கன ஈண்டு அடையாளப்படுத்தப் படுகின்றன. நெய்தல் நிலத்தே பல போர்கள் நடந்துள்ளன. நெய்தல் நிலம் போர்க்களமாயிருந்ததற்குச் சாலச் சிறந்த இடமாகும். 'தும்பை தானே நெய்தலது புறனே' என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில், *'இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுமாதலானும், அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும்'* இளம்பூரணரும் போர்க்களமாயிருந்ததற்கு நெய்தலே சாலச் சிறந்தவிடம் என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். பல போர் நிகழ்ச்சிகள் நெய்தலில் காணப்படுகின்றன. அப்போர் நிகழ்ச்சிகளையும், பிற சிறப்புச் செய்திகளையும் ஈண்டுக் காண்போம்.

**மன்னர்களும் போர் நிகழ்ச்சிகளும்**

நெய்தல் நிலத்துக்குரிய புன்னைமரமானது திதியன் என்னும் குறுநில மன்னனின் காவல் மரமாயிருந்துள்ளது (அகம். பாலை. 45:9-11). அன்னி என்னும் குறுநில மன்னன் வலிமிக்க ஊர்களையும், வேற்படையினையுமுடைய எவ்வியென்னும் சிற்றரசனது அறிவுரையையும் பொருட்படுத்தாமல், அத்திதியனைக் “குறுக்கைப் பறந்தலை” என்னுமிடத்தே எதிர்த்து அவனது காவல் மரமாகிய அப்பழம்பெரும் புன்னையைத் துணித்தான். அதனைப் பொறாத திதியன், அன்னியைக் கொன்றொழித்தான். குறுக்கைப் பறந்தலை நெய்தல் நிலத்தின் சிறந்த பதியெனவும், நெய்தல் நிலத்திற்குரிய மரமான புன்னையைக் காவல் மரமாகக் கொண்டிருந்தான் என்ற காரணத்தால் திதியன் நெய்தல் நிலத்தையுள்ளிட்ட நாட்டின் தலைவன் எனவும் கொள்ளலாம்.

**திருமுடிக்காரி**

முள்ளூரை ஆண்ட குறுநில மன்னன் மலையமான் திருமுடிக்காரி என்று வழங்கப்பட்டான். இவனது குதிரையின் பெயரும் காரியே. இவன் வல்வில் ஓரியென்பானொடு போர்புரிந்து அவனைக் கொன்ற பெருமையுடையவன். முள்ளூர்க்கு மன்னனாகிய இக்காரி, தன் குதிரையின் துணையுடன் இரவோடிரவாக ஆயர்தலைவர்களின் பசுக்களைக் கவர்ந்ததும் அவர்கள் வருந்திய நிலையினையும் நற்றிணைப் பாடலொன்று குறிப்பிடப்படுகிறது.

*மா இரு முள்ளூர் மன்னன் மாஊர்ந்து*
*எல்லித் தரீஇய இனநிரைப்*
*பல் ஆன் கிழவரின் அழிந்த...* (நற். 291:7-9)

**தித்தன் வெளியன் கடற்றுறை**

வீரை என்பது கடற்றுறை. “*அடுபோர் வேளிர், வீரை முன்துறை*” (அகம் 206:13-14). மருதத்திலும் போரில் வல்ல வேளிர்களுள் சிறந்த வெளியனின் மைந்தன் தித்தனுக்குரியது இத்துறை

“வீரை வேண்மாள் வெளியன் தித்தன்” (நற்.58). இத்துறையின்கண் பரந்துவிரிந்து கிடக்கும் உப்பளத்தில் விளைந்த வெள்ளுப்பு, குன்றெனக் குவிந்து கிடக்கும். அவ்வீரை நகரின் கண்ணுள்ள முரசுகட்டில்களில் மாலை வேளையில் வரிசையாக விளக்குகள் சுடர்விட்டெரியும் அவ்வரிசையொழுங்கு கடற்கரைக்கண் நிரையுறக் கிடந்து முழங்கும் சங்கங்களைக் காணும். தித்தன் உறையூர்க்கண்ணிருந்து நாடுகாவல் புரிந்தவன் என்பதால் அவ்வீரைத்துறை, சோழ நாட்டுக் கடற்கரையதாகலாம். இவனது துறைமுகப்பட்டினம் கானலம் பெருந்துறை. தன்னைப் புகழ்ந்து பாடிய பாணர்க்குப் பரிசுபல அளித்தவன். வீரமிக்க காலாட்படையினை யுடையவன். இவனது பட்டினத்துக்குப் பொன்னை ஏற்றிக்கொண்டு வந்து கொடுத்து, இந்நாட்டுப் பொருள் பல பெற்றுச் சென்ற வணிகச் செய்தியையும் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது (அகம்.152:5-8).

**பெண்கொலை புரிந்த நன்னன்**

நன்னன் குறுநில மன்னன் என்பதும் பெண்கொலை புரிந்தவன் என்பதும் சங்க இலக்கியங்கள் வழியே கண்ட வரலாற்றுச் செய்தியாகும். இவன் வேற்படை தாங்கிப் போர்புரிவதில் வல்லவன். விரைந்தோடும் குதிரைப் படையினையுடைய பிண்டன் முதலான சிற்றரசர்களைத் தோற்கடித்தவன் வேந்தரின் மகளிர் கூந்தலைக் களைத்த கொடுமையையும் பின்வரும் பாடலின் வாயிலாக அறிய முடிகிறது.

*... பொற்புடை*
*விரிஉளைப் பொலிந்த பரியுடை நன்மான்*
*வேந்தர் ஒட்டிய ஏந்துவேல் நன்னன்*
*கூந்தல் முரற்சியின் கொடிதே...* (நற். 270:7-10)

**அம்பலும் அழுங்கல் ஊரும்**

புறையாறு என வழங்கும் புறந்தை புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் மலிந்த சோழ நாட்டுக் கடற்கரை நகர். பெரியன் என்னும் குறுநில மன்னனின் தலைநகர். பெரியன் குதிரைகளைப் பூட்டிய தேர்ப் படையையுடையவன். தன்னை நாடி வருபவர்களுக்குப் பரிசுகள் பல வழங்கும் வள்ளல் தன்மையுடையவன் என்று இப்பாடல் குறிப்பிடுகிறது.

*ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்*
*பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்*
*பரியுடை நல்தேர்ப் பெரியன் விரிஇணர்ப்*
*புன்னைஅம் கானல் புறந்தை...* (அகம்.100:10-13)

**விச்சிக்கோ**

இவன் குறுநில வேந்தன், விற்போரில் சிறந்து விளங்கியவன். வேந்தரோடு போர்க்களத்தில் இருந்து போர் புரிந்தகாலை போர்ப் பரணி பாடப் பாணர்கள் சென்றனர். கடுமையாகப் போர் இருந்ததால் காண்பவர்கள் நிலையை மாற்ற சிங்கப்பார்வை இருபுறமும் பார்த்தனர். அங்கெழுந்த பேரொலி, ஆரவாரம் மிக்க குறும்பூர் என்னும் ஊரில் எழும் பேரொலியினும் மிக்கு முழங்கியது என்று குறுந்தொகைப் பாடலொன்று (328:5-8) கூறுகின்றது. இந்த விச்சிக்கோ புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் புலவர்கள் பாடிப்புகழும் வள்ளல் விச்சிக்கோவாக இருக்கலாம் என உ.வே. சாமிநாதையர் கருதியுள்ளார்.

**இராமாயண இதிகாசச் செய்தி**

இராவணனுடன் போர்புரிந்து சீதையை மீட்டுவர இராமன் இலங்கை மாநகர்க்குச் சென்ற செய்தி நெய்தல் நிலப் பாடல்களில் வரலாற்றுச் செய்தியாக (அகம் 70:13-17) இயம்பப்படுகிறது. இராமன் இலங்கையை நோக்கித் தன் சேனையோடு புறப்படுதற்கு முன்னர்ப் பழமைமிக்க திருவாணைக்கரையில் (தனக்கோடியில்) ஆலமரத்தடியில் தங்கித் தம் துணைவர்களோடு ஆலோசனை நடத்தியபோது மரத்தில் தங்கிய பறவைகளின் ஒலி இடையூறாயிருந்தமையால்

பறவைகளின் ஒலியை நிறுத்தினர் என்ற இதிகாசச் செய்தியும் அந்தக் கோடியக்கரை பாண்டியர் ஆட்சியில் அன்று இருந்ததென்ற உண்மையும் காணமுடிகிறது.

*வென்வேற் கவுரியர் தொல்முது கோடி*
*முழங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை*
*வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த*
*பல்வீழ் ஆலம் போல*
*ஒலிஅவிந் தன்று* (அக.70)

**பதிகளும் பட்டினங்களும் - அலைவாய்**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைக்கண் பொலியும் முருகன் திருக்கோவிலான திருச்செந்தூர் திருச்சீரலைவாய் என இலக்கியத்தில் குறிப்பிடப் பெறுகிறது. அலைகள் மிகுந்து காணப்படுவதால் இதற்கு திருச்சீர் அலைவாய் எனப்படும். உழவனின் ஓசைக்கு அஞ்சிய மயில் அலைகளின் ஓசை அதிகம் உள்ள இடத்தில் வந்து தங்கின அச்சீரலைவாயமர்ந்தவன் வன்மைமிகு முருகன் என்று அகப்பாடல் 'திருமணி விளக்கின் அலைவாய்ச்' (அகம் 266:16-21) குறிப்பிடுகிறது.

**குடந்தை**

சோழ மன்னர்கள் வேற்படையில் சிறந்தும் மாற்றரசர்களை மாய்த்தும் பல வெற்றிகளைப் பெற்றனர். மன்னர்கள் பலர் தம்மிடம் தோற்றும் அவர்கள் அரசிறையாகப் பெற்ற பெருஞ்செல்வத்தை பாதுகாப்புடன் குடவாயில் நகரில் வைத்திருந்த செய்தி என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்று பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

*…வெல்வேல்*
*கொற்றச் சோழர் குடந்தை வைத்த*
*நாடுதரு நிதியினும் செறிய* (அகம்.60:12-14)

**கொற்கை**

கொற்கையைத் துறைமுகமாய்க் கொண்டு ஆண்ட மன்னன் பாண்டியன். இவனது தலைநகர் மதுரை. மலை போன்ற மாடமாளிகைகளைக் கொண்டும் கூடல் நகர் என்றும் பெயர் பெற்றது. அம்மாநகரில் பாண்டியன் நெடுஞ்செழியன் வெற்றி எனும் பெரிய வேற்படையும், யானைப் படையும், நெடிய தேர்ப்படையும் என இவ்வகை வலிமை படைத்த படையுடன் பல மன்னர்களைத் தோற்கடித்த செய்தியும் கொற்கை நகர் பற்றிய குறிப்பும் குறிப்பிடத்தக்கன (அகம் 296:10-12). மேலும் (அகம். 201:2-4, அகம். 27:6-9) ஆகிய பாடலடிகள் பாண்டியரின் அறநெறி பிறழாது செங்கோல் செலுத்திய சிறப்பையும் வெண்கோட்டு வெற்றிக் களிறுகளைத் திறையாகப் பெற்ற செய்தியையும் கொற்கையின் வரலாற்றினையும் பாண்டிய மன்னர்களின் போர்த்திறனையும் அறிய உதவுகின்றன.

*பேர்இசைக் கொற்கைப் பொருநன் வெண்வேல்*
*கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்*
*மலைபுரை நெடுநகர்க் கூடல்* (அகம்.296)

*… பொன்னின்*
*அவிர்எழில் நுடங்கும் அணிகிளர் ஓடை*
*வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்* (அகம். 201)

**பொறையன் தொண்டி**

சேரநாட்டின் ஒப்பற்ற துறைமுகமாகத் தொண்டி விளங்கியது. இது அயல்நாடுகளுடனான வணிகத் தொடர்பு கொண்டதாகும். உலகம் போற்றக் கூடியதாக அமைந்தது தொண்டி

துறைமுகமாகும் (அகம்.60:8), பொறையன் தொண்டி என்றும் (நற்.8:9), குட்டுவன் தொண்டி (குறு.128:2) பொறைநாடு என்றும், வெண்தந்தங்கள் பொலியும் பெருங்களிற்றுப் படையினையுடையவன் (அகம் 290:12), திண்ணிய தேர்ப்படையுடன் திகழ்ந்தவன் என்றும் (அகம் 60:8), குதிரைப் படையினையும் தேர்ப் படையினையும் கொண்டு விளங்கிய குட்டுவன் என்றும் அறிய முடிகின்றது(அகம். 270:8-9). மேலும், தொண்டி இன்றும் குறும்பொறை நாட்டின் ஒரு சிற்றூராகவே இருந்து வருகிறது. இவ்வகையானும் பொறையன், குட்டுவர் குடவர் பொறையர் கடுங்கோ இவர்கள் சேர அரசகுடி வகைகளில் ஒருவன் என்ற கருத்தினை ஔவை துரைசாமிப் பிள்ளை நற்றிணை விளக்க உரையில் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**பவத்திரி**

என்றைக்கும் எக்காலத்தும் கெடாத இனிமையான புகழினையும், பொன்னவிர் பூணினையும் பூண்டிருந்த திரையன் என்ற மன்னன் பல்வண்ணப் பூக்கள் பூத்துப் பொலிந்த பொழில்பல சூழ்ந்த பவத்திரி நகரைத் தலைநகராய்க் கொண்டு செங்கோல் செலுத்திச் சிறப்புற ஆட்சி செய்த செய்தியைப் பின்வரும் பாடலடிகளில் காண முடிகிறது.

*செல்லா நல்லிசை பொலம்பூண் திரையன்*
*பல்பூங் கானல் பவத்திரி...* (அகம்.340:6-7)

**முடிவுரை**

நெய்தல் நிலம் என்பது பரதவர்களின் வரலாற்றினைச் சுட்டும் நிலம் மட்டுமன்று அதற்கு அப்பாற்பட்ட நிலையினைப் பார்க்கும்போது, நெய்தல் நிலத்தில் நடந்த போர்நிகழ்ச்சிகள், நெய்தல் நிலத்தை ஆண்ட மன்னர்கள், மற்றும் குறுநில மன்னர்கள், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஊர்கள், குறிப்பிடத்தக்க சிறப்பு நிகழ்ச்சிகள் இதுபோன்ற செய்திகளும் நெய்தல் நிலத்தை மையப்படுத்திய சங்கப்பாடல்களின்வழி அறியப்பெறுகின்றன.

**துணைநின்றவை**


- சுப்பிரமணியன், ச.வே.(உரை.), 2013(12ஆம் பதிப்பு), *தொல்காப்பியம்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8.
- ..........................,(உரை.), 2003(மு.ப.), *பத்துப்பாட்டு,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- தமிழண்ணல்(உரை.), 2002(மு.ப.), *குறுந்தொகை,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- மகாதேவன் கதிர்.(உரை.), 2003(மு.ப.), *நற்றிணை,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- மீனவன் நா. (உரை.), 2004(மு.ப.), *அகநானூறு,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- முத்துக் கண்ணப்பன் தி., 1978, *சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்,* அதிபந்தர் பதிப்பகம், சென்னை.